1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உயர்த்தப்பட்டிருக்கின்ற 5 ரூபாயில் வாரத்திற்கு 5 நாட்கள்தான் கொடுக்க முடியும். அதிகமாகப் பணமிருந்தால் இன்னும் 7 நாட்களுக்குக் கூடக் கொடுக்கலாம். பணம் குறைவாக இருப்பதால் ஏதாவது இரண்டு நாட்கள் விடப்படவேண்டும் என்று சொல்லும்பொழுது, மாணவர்களின் விருப்பம் அது வெள்ளி, சனி என்று இருக்கட்டும் எனக் கூறுகிறார்கள். ஆகவே வெள்ளி, சனிக்கிழமைகளில் வழங்காமல் மற்ற நாட்களிலே வழங்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்படி சத்துணவு கொடுக்கப்பட்டும்கூட இந்தப் பின்தங்கியவர்கள் வசிக்கும் மாணவர் விடுதிகளிலும், அரிசனங்கள் வசிக்கும் மாணவர்கள் விடுதிகளிலும் இருப்பவர்களுக்குச் சோகை நோய் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன்காரணமாகப் பல மாணவர்கள் வருந்துகிறார்கள், அப்படிப்பட்ட சோகைநோய் எத்தனைபேருக்கு இருக்கிறது என்ற கணக்கையெடுத்து அதை நீக்குவதற்கு இன்னும் அதிகச் சத்துள்ள உணவு வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரண்டு சமுதாய மாணவர்களுக்கும்தான் இந்த 5 ரூபாய் உயர்த்திச் சத்துணவு போடும் திட்டம் இருக்கிறது. மாணவர்களுக்குச் சத்துக் குறைவாக இருப்பதால் வளர்ச்சியில்லாமல் பல நோய்கள் வருகிறது என்பதை அறிந்துதான் இந்த சத்துணவு போட வேண்டுமென்று, மிகவும் சத்து அடங்கியுள்ள முட்டையும் பாலும் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத்துக் கொடுக்கிறோம். அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இப்பொழுது இப்படிப்பட்ட சத்துணவு பெற்ற பிறகு மாணவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை அவ்வப்பொழுது பரிசிலனைசெய்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Supply of milk powder in slum areas

*853 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether milk powder and milk prepared therefrom are being distributed in slum areas in Madras City by any Private Agencies; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) பால் மாவு, அறநிறுவனங்கள் மூலமாக, இனம், சாதி, சமய வேறுபாடின்றி ஏழையருக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக டென்மார்க், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளால் நன்கொடைப் பொருள்களாக வழங்கப்படுகிறது. இத்தகைய பதினேரு அறநிறுவனங்கள், சென்னை மாநகர் குடிசை வாழ் பகுதிகளில் பால் வழங்குகின்றன. இதுகுறித்து மாநில அரசுக்கு நேரடிப் பொறுப்பு எதுவுமில்லை. ஆயினும், பால்மாவு தவருகப் பயன்படுத்தப்படாமலிருப்பதைத் தவிர்க்க நன்கொடைச் சரக்கு எப்போது வருகிறது, எப்படிப் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பது குறித்து நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அறிவிக்க வேண்டும். இது சரிவரப் பகிர்ந்தளிக்கப்படுவது குறித்து சான்றிதழ் ஒன்றை மாநில உணவுப் பொருள் வழங்கு அதிகாரிகள் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படுவது உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையாளரால் கண்காணிக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, லிஸ்ட் தயார் செய்து அதன் அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் அல்லது பொதுநல நிறுவனங்களின்மூலம் இவைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதற்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையில்லை. நல்ல வாலண்டரி இன்ஸ்டிடியூஷன்ஸ், தனியாகத் தொண்டு செய்யும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் இவைகளையெல்லாம் முறையாகச் செய்கிருர்கள். அப்படிப்பட்ட நிறுவனங்கள் சென்னையில் 11 நிறுவனங்கள் இப்படிப்பட்ட பாலைக் கொடுத்துக்கொண்டு வருகிருர்கள்.

சிறுமலைக் காடுகளிலுள்ள நிலங்கள்

*854 வினு—திரு. க. நாகராஜன்: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுமலைக்காடுகளில் சர்வே செய்யப்பட்ட ரெவின்யூ நிலங்களை ஏற்கனவே நிறைய நிலம் உள்ளவர்களும் பெரிய